2010 மே 10]

பிறப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது. அதுபோல ஒய்வூதியம் என்பது குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கிய ஒய்வூதியம் வழங்கப்படும் என்ற உத்தரவிற்கேற்ப அனைவரும் ஒய்வூதியம் பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல இதுவரை இந்தச் சத்துணவுத் திட்டங்களில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் உத்தவிட்டுள்ளார்கள். அனைவருக்கும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல நிதி உதவி உயர்த்தப்படுமா என்று கேட்டார்கள். அதையும் அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

157—

விடுதி

***70194—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ஆதி திராவிட மகளிர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ஆதி திராவிடர் மகளிர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைவாசல் தொகுதியில் வட சென்னிமலை

அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் ஏறத்தாழ 1,850 மாணவ, மாணவியர்கள் உயர் கல்விப் பயின்று வருகின்றனர். இதில் 500-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவிகள் பயின்று வருகின்றனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்கொண்டு அங்கே ஒரு மாணவர் விடுதி அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டில் சேலம், தலைவாசல் தொகுதிக்குட்பட்ட கெங்கவல்லியில் ஒரு மாணவர் விடுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் 2008-2009 ஆம் ஆண்டில் திருமனூர் என்ற பகுதியில் மாணவியர் விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைமீது, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியில் ஆத்தூர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, வாழப்பாடி, தலைவாசல், கெங்கவள்ளி, போன்ற கிராமப்புறப் பகுதிகளிலிருந்து அதிகமான மாணவ, மாணவிகள் படிப்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் 25 விடுதிகளை இந்த ஆண்டு தொடங்க இருப்பதாக அறிவித்தார்கள். அதில் ஒரு விடுதியை இந்த ஆண்டிலே அங்கே தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 மே 10]

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று 2007-2008 ஆம் ஆண்டில் 25 புதிய விடுதிகளையும், 2008-2009 ஆம் ஆண்டில் 26 புதிய விடுதிகளையும், அதைப்போல நடப்பாண்டில் 25 புதிய விடுதிகளையும் தொடங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

158—

நவினப்படுத்துதல்

***108667—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அரசாணை எண் 129, வேளாண்மைத் துறை, நாள் 19-3-2008-இல் 95 இலட்சம் ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ஏற்கெனவே உள்ள 2,400 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள இரண்டு சினை மீன் குளங்களைப் பழுது நீக்கிப் புனரமைப்பு செய்து, நடப்பாண்டில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, தற்போது மீன் குஞ்சு உற்பத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 35 இலட்சம் ரூபாய் செலவில், அழிந்துவரும் நாட்டு மீன்களான கல்பாசு, சேல்கெண்டை மற்றும் வெண்கெண்டை போன்ற மீன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS